இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# Diocesan News Letter
## Vellore

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 15** **JUNE - 2019** **No. 6**



## *70th Birthday*
## *Hearty Congratulations !*

| Birthday | Ordination day |
|---|---|
| 06-06-2019 | 25-06-2019 |

**Dear Fathers, Brothers and Sisters in Christ Jesus!**

Month of May might have brought certainly the blessings of our Mother in abundance as we have celebrated the May Devotion at various levels in our parishes. Also VBS classes might have enriched and enlightened our children in Biblical knowledge. I, in the name of our bishop appreciate all the parish priests and the teachers for their wonderful service.

The diocesan Shrine Feast of Our Lady of Lourdes, Chetpet witnessed abundant of God's blessings as the people flocked together in multitude on 7 and 8 May involved themselves actively in prayer and procession to Madha Hill. On behalf of our beloved bishop I thank the parish priest, the leaders, parish council members, the religious, youth, Anbiyams and all those who worked for the success of the feast sincerely for their enormous effort that made the feast very solemn and congratulate them for the same.

Our bishop expresses his words of appreciation and congratulation to all our correspondents and Headmasters for the excellent results that they brought to our schools. At this juncture we thankfully remember all our teachers for their excellent service and the students for their hard work. A special word of appreciation and congratulation go to all our religious men and women who worked selflessly for the good result. As the new academic year begins we wish them all God's wisdom and blessings. I would like to remind all the religious superiors and principals that the admission and concession to our Catholic children in our schools is mandatory.

Month of June witnesses both the feasts of St. Antony of Padua and Most Sacred Heart of Jesus respectively. St. Antony of Padua reminds us our zeal for the proclamation of God's words and the devotion to the Blessed Sacrament. Let us have the same zeal to take the word of God every nook and corner. Let St. Antony pray for us. The feast of Most Sacred Heart of Jesus reminds us the bountiful mercy of God the Father. It flows from the pierced heart of Jesus. Let us be kind and merciful to all specially to the poor and the marginalized.

Month of June also is a month of transfers to our priests. Our bishop expresses his deep sentiments of thanks and appreciation to all our priests those who are transferred this year for their excellent and sacrificial ministry in their respective parishes and institutions. He also wishes them all good luck and God's blessings in their new assignments.

Pope Francis has announced EXTRAORDINARY MISSIONARY MONTH OCTOBER 2019 (EMM OCT 2019) and inviting all to prayerfully plan and prepare for this special missionary celebration in the Universal Church. Our bishop has given below the translation of Pope's letter and the plan of initiating this program at various levels throughout our diocese. All the parish priests are asked to read this letter in the church on Sunday 9 June, 2019 and prepare the people accordingly.

## சிறப்பு மறைப்பரப்பு மாதத்திற்கான மேய்ப்புப்பணி கடிதம் (அக்டோபர் 2019)

**கிறிஸ்துவில் பிரியமான எனதருமை குருக்களே, இருபால் துறவியரே மற்றும் இறைமக்களே!**

உங்கள் அனைவரையும் இம்மேய்ப்புப்பணி கடிதம் வழியாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். மறைபரப்புப் பணியில் செழித்தோங்கி வளர்ந்திட நம் திருத்தந்தை பிரான்சிஸ் கொடுத்துள்ள அழைப்பினை ஏற்று நம் வேலூர் மறைமாவட்டத்தில் நாம் ஆற்றவேண்டிய பணிகளை இக்கடிதம் வழி முன்மொழிந்திட விழைகின்றேன்!

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பு!**

1919 நவம்பர் 30ம் தேதி 'மேக்ஸிமும் இல்லூட்'(Maximum illud) – 'அந்தநேரத்தில்' என்ற திருத்தூது மடலை (Apostolic letter) அகில உலக திருஅவைக்கு திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் வழங்கினார். மாற்கு 16:15-ல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் மறைபரப்புக் கட்டளையை– "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்னும் இறைவாக்கை மையமாகக் கொண்டு, திருஅவையின் திருத்தூதுப் பணிக்கு புது இரத்தம் பாய்ச்சி முடுக்கிவிடவே இத்திருத்தூது மடல் திருஅவைக்குத் தரப்பட்டது. அதன் நூற்றாண்டு நினைவாக, வருகின்ற அக்டோபர் மாதத்தை **'சிறப்பு மறைப்பரப்பு மாதமாக' (Extraordinary missionary month)** சிறப்பிக்க மறைப்போதகக் குழுமத்தின் (Congregation for the Evangelisation of people) உலகளாவிய திருஅவையை நம் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார். இதன் மூலம் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் மறைபோதகப் பணியை உத்வேகத்தோடு நிறைவேற்ற திருத்தந்தை திருஅவையைப் பணிக்கின்றார்.

100 ஆண்டுகளுக்கு முன்பு தரப்பட்ட 15ம் ஆசீர்வாதப்பரின் மடல், இறைவாக்கு உணர்வோடும், மறைபரப்பு ஆர்வத்தோடும் நாட்டின் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்து மதிப்பீடுகளின் வழியில் சாட்சியவாழ்வு வாழ திருஅவையை பணித்தது. அம்மடலின் நூற்றாண்டு விழாவில் இன்னும் உத்வேகத்தோடு மறைப்பரப்புப் பணியை ஆற்ற நம் திருத்தந்தை அழைக்கிறார். மறைப்பரப்புப் பணியே திருஅவையின் அடிப்படைப் பண்பு; அதுவே அதன் தனிப்பட்ட அடையாளம்; அதுவே அதன் இன்றியமையாத பணி; இதுவே திருஅவைக்குத் தரப்பட்ட அருளும் அழைப்புமாகும். ‘என்றும் வாழ்கின்ற இரக்கமுள்ள மீட்பர் மானுடம் வாழ்வுபெற சிலுவையில் உயிர்நீத்து உயிர்த்தெழுந்தார்’. இதுவே நாம் அறிவிக்க வேண்டிய நற்செய்தியின் சாரம். தூய ஆவியின் தூண்டுதலால் நம் ஆண்டவர் நடந்த ஏழ்மையின், கீழ்படிதலின் சேவை மற்றும் தியாகத்தின் வழியில் மறைப்பரப்புப் பணியை ஆற்றவேண்டியது இன்றியமையாதது.

‘கிறிஸ்துவால் அனுப்பப் பெற்ற திருஅவை கடவுளின் அன்பை எல்லா மக்களுக்கும், நாடுகளுக்கும் அறிவிக்க வேண்டிய மறைப்பரப்புப் பணியை இன்னும் முழுமையாக நிறைவு செய்யவில்லை என்பதை உணர்வது நலம் பயக்கும்’ என்னும் திருத்தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரின் வார்த்தைகள் மனதில் இருத்தப்படவேண்டும். அதைப்போலவே ‘திருஅவையிடம் ஒப்படைக்கப்பட்ட மீட்பர் இயேசுவின் மீட்புப்பணி இன்னும் முழுமையையும் நிறைவையும் அடையவில்லை என்ற திருத்தந்தை புனித 2-ம் யோவான் பவுலின் கூற்றும் இங்கு நினைவுக் கூறப்படுதல் முக்கியமானதாகும். எனவே புத்துயிர் ஊட்டப்பட்ட, புதுப்பிக்கப்பெற்ற, ஈடுபாடு கொண்ட மறைப்பரப்புப் பணி காலத்தின் கட்டாயமாகும். பிறரோடு பகிரப்படும்போதுதான் நம் நம்பிக்கை பலம் பெறுகின்றது.

இதையே தன்னுடைய ‘மகிழ்ச்சியின் நற்செய்தி’ (Evangelii Gaudium) என்னும் மடலில் நம் திருத்தந்தை பிரான்சிஸ் பின்வருமாறு கூறுகிறார். மறைப்பரப்புப் பணியே திருஅவையின் தலையாயப் பணி. பல்வேறு சவால்களை நவீன உலகில் திருஅவை எதிர்கொண்டாலும் நற்செய்தியைப் பரப்புவதில் எவ்வித சுணக்கமும், தொய்வும் ஏற்படாமல் இருக்க திருஅவை பார்த்துக் கொள்ள வேண்டும்’. தொடர்ந்து திருத்தந்தை தன் நிலைப்பாட்டினை தெள்ளத்தெளிவாக பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். மறைப்பரப்புப் பணியில் மேற்பார்வை அல்லது வெறும் நிர்வாகம் செய்வது மட்டும் பலன் தராது; மாறாக திருஅவை தன் வசதியான கூடுகளை (Comfort zone) உடைத்துக் கொண்டு தன்னிடம் இருக்கின்ற கட்டமைப்புக்கள் மற்றும் மரபு வழிமுறைகள் இவற்றை புது மறைப்பரப்புப் பணிக்காக பயன்படுத்திக் கொள்ளுதலே சாலச் சிறந்தது. எனவே நம் திருஅவையின் சுயஉள்நோக்கு (Introversion) முகத்தையும், பயன்தரா கடந்தகால நினைவுகளையும்; சுயமுனைப்பு (Self-reference) பார்வைகளையும், எதிர்மறை எண்ணங்களையும் புறந்தள்ளி இயேசுவின் நற்செய்தியான பாவத்தை முதன்மைப்படுத்தாத மன்னிப்பையும், சாவை வென்ற வாழ்வையும், பயத்தை புறந்தள்ளும் அன்பையும் உலகெங்கும் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தோடு அறிவிக்க வேண்டும்.

**வேலூர் ஆயனின் அழைப்பு!**

நம்முடைய மறைமாவட்டத்தின் அரசியல், பொருளாதார, சமய மற்றும் சமூக கட்டமைப்புக்கள் மிகப் பெரிய சவால்களை இப்புதிய நற்செய்திப் பரப்பிற்கு முன் வைக்கின்றன. பெருகிவரும் சமய சகிப்பின்மையும் (Religious intolerance), மத அடிப்படைவாதம் (Religious fundamentalism), பொருளாதார ஏற்றத்தாழ்வும், சாதீய உணர்வுகளும், உறவுகளை கொல்லும் தகவல்தொடர்பு அடிமைத்தனமும் தொடர்ந்து

நற்செய்தி அறிவிப்புப் பணிக்கே முட்டுக்கட்டைகளாக உள்ளன. இந்த சூழ்நிலையில் எவ்வாறு 'இயேசுவின் முகமாக', 'வாழும் நற்செய்தியாக' நாம் நற்செய்திப் பணியை ஆற்ற முடியும் என்பதை சிந்திப்போம். அதற்காக பின்வரும் என் கருத்துக்களை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

- மாற்கு 16:15-ல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் மறைபரப்புக் கட்டளையான "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்னும் கட்டளையை நம் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகள் மற்றும் கிளைபங்குகளில் எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளோம் என **மறைமாவட்டம், மறைவட்டம், பங்கு என அனைத்து நிலைகளிலும் சுயஆய்வு** மேற்கொள்ள அன்போடு பணிக்கின்றேன்.

- 'மறைப்பரப்புப் பணி குருக்கள் மற்றும் துறவறத்தாரிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்ட பணி, நமக்கு எந்த கடமையும் இல்லை என்ற பொறுப்பற்ற எண்ணத்தை இறைமக்கள் கைவிட்டுவிட்டு துறவறத்தாரோடு தோள்கொடுத்து உழைப்போம். அதற்கேற்ற வகையில் நற்செய்திப் பணி எங்களின் சொத்து என்ற ஆதிக்கப்போக்கை விடுத்து, குருக்கள் **'பொதுநிலையினரின் நற்செய்திப் பணியை'** பங்குத்தளங்கில் ஊக்குவிக்கவும் (Evangelisation through Laity) கேட்டுக்கொள்கிறேன்.

- மறைப்பரப்புப் பணியே திருஅவையின் தலையாயப்பணி. பல்வேறு சவால்களை நவீன உலகில் திருஅவை எதிர்கொண்டாலும் நற்செய்தியைப் பரப்புவதில் எவ்வித சுணக்கமும் தொய்வும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால்

சவால்களை சந்திக்கும் திறன் கொண்ட நம் **இளைஞர் - இளம்பெண்களின் ஆற்றலை மறைபரப்புப் பணிக்கு ஏற்றதாக மாற்றிடும் முயற்சிகள்** மேற்கொள்ளவேண்டும். ஏனெனில் இளைஞர்கள் நாளைய திருஅவையின் சொத்து.

- வார்த்தைகளைவிட வாழ்க்கையே இயேசுவின் நற்செய்தியை உரக்க அறிவிக்கும் என்பதை உணர்ந்து கிறிஸ்துவர்களாகிய நம்மிடம் இருக்கும் **சாதீய பகைமைகள், ஆன்மீக வெதுவெதுப்பு (Spiritual tepidity) மற்றும் வெறுமை, நுகர்வுவெறி, சமூக அலட்சியப்போக்கு (Social indifference), ஊடக அடிமைத்தனம், குடிவெறி (Alcoholism) மற்றும் உடைபடும் குடும்ப கட்டமைப்பு (Dysfunctional family), குருக்கள் எதிர்ப்பு (Anti-clerical attitude)** இவற்றை நீக்கி சகோதர வாஞ்சையோடும், சமூக ஈடுபாட்டோடும், கண்ணியமான கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்தல் மாற்றங்களை ஏற்படுத்தும்.

- சமயங்களைத் தாண்டி, சமூக நலனிற்காக நாட்டு முன்னேற்றத்திற்காக **பிறசமய மக்களோடு கைகோர்த்து பணிசெய்தல்** கிறிஸ்து மதிப்பீடுகளை வளர்க்க வாய்க்காலாக அமையும். (Inter-religious Dialogue) – (Nostra Aetate. 3)

- மத அடிப்படைவாதம் எந்த வடிவங்களில் இருந்தாலும் அதை களைந்து எதிர்த்து இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்னெடுத்த **சமய சகிப்புத்தன்மையை** (Religious tolerance) நம் வாழ்வின் தாரக மந்திரமாக்குவோம்.

- மறைபரப்புப் பணி வலிமையான அடித்தளத்தோடு அமைய வேண்டுமாயின் நம் பிள்ளைகளின் **மறைக்கல்வி வகுப்புகள் காலத்திற்கேற்ற நல்ல மாற்றங்களோடு, புதுமையான விதங்களில் அவர்களின் உள்ளத்தில் புகுத்தப்பட வேண்டும்.** அதற்கு சிறப்பான பயிற்சிபெற்ற ஆசியர்களை உருவாக்குதலும், பிள்ளைகள் மறைக்கல்வி வகுப்புகளில் குறிப்பாக ஞாயிறு மறைக்கல்வியில் ஆர்வத்துடன் பங்கேற்க புதுமையான வழிகளை கண்டறிதலும் காலத்தின் கட்டாயம் ஆகும்.

- மறைபரப்பு என்பது அடிப்படையில் குடும்பத்தில் ஆரம்பமாகின்றது. எனவே, **குடும்பத் தலைவர்களுக்கான, பெரியவர்களுக்கான சிறப்பு மறைக்கல்வி** வகுப்புகள் நம் பங்குகளில் உள்ள அனுபவமிக்க ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பல்வேறு துறைசார்ந்த வல்லலுநர்களின் துணையோடு தொடரப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அன்பியங்கள் நமது பங்கின் உயிர்நாடி; மற்றும் நமது மேய்ப்புப் பணியின் இன்றிமையாத தளமாகும். அன்பியங்கள் நமது அன்றாட கிறித்துவ வாழக்கையை வளப்படுத்தும் அமைப்பாகும். இன்று பல பங்குகளில் செயலற்ற அமைப்பாகவும் விழாக்களை கொண்டாட மட்டுமே பயன்படுத்தப்படும் அமைப்பாகவும் மாறிவிட்டது. அன்பியங்கள் எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் எல்லா வயதினர்க்கும் நற்செய்தி அறிவிக்கும் சிறந்த தளமாகும். மீண்டும் நமது அன்பியங்களை கட்டிஎழுப்புவோம்; நற்செய்தியின் மையங்களாக மாற்றுவோம்.

- ➢ தொய்வுற்றும், தேய்ந்து போயுமுள்ள அனைத்து **பக்த சபைகளையும்** மீண்டுமாக உயிரோட்டமுள்ள விதத்தில் செயல்பட புதுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

- ➢ தாய்திருஅவை அனைவருக்குமானது. யாரும் அதிலிருந்து விலக்கிவைக்கப்படவோ, ஒதுக்கிவைக்கப்படவோ கூடாது என்பதனை கருத்தில் கொண்டு மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் போன்றவர்களுக்கான சிறப்பு மறைபரப்பு முயற்சிகளையும் நம் மறைமாவட்டம் முழுமையும் செய்திட வேண்டுகிறேன்.

மேற்சொன்ன திட்டங்களை உங்கள் பங்குகளின் வசதிக்கேற்றவாறு செயல்படுத்திட திட்டமிட்டு **சிறப்பு மறைப்பரப்பு மாதத்தினை** அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் மறைமாவட்ட அளவில் நடக்கவிருக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் குருக்களும், துறவறத்தாரும், பொதுநிலையினரும் கலந்துக் கொள்வது மிகவும் அவசியம். பொதுநிலையினர் இந்நிகழ்ச்சிகளில் பங்குக்கொள்ள உற்சாகப்படுத்த பங்குத் தந்தையர்களை கேட்டுக்கொள்கிறேன். இம்மடலை வருகின்ற ஞாயிறு (09.06.2019) திருப்பலியில் இறைமக்களுக்கும் துறவற இல்லங்களிலும் அறிவித்திட உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் இறையாசீரும், நம் மறைமாவட்ட பாதுகாவலி சகாய அன்னையின் பரிந்துரையும் உங்கள் அனைவரின் மறைபரப்பு முயற்சியிலும் உடனிருப்பதாக!

அனைவருக்கும் இறையாசீர்!

+ மேதகு ஆயர் முனைவர் பெ. சௌந்தரராஜு ச.ச

வேலூர் மறைமாவட்ட ஆயர்.

Following are the programs for the "Extraordinary Missionary Month of October – 2019.

## I. Diocesan Level

**Clergy**

| | | |
|---|---|---|
| Date | : | 17-06-2019, Monday (Full Moon day) |
| Speaker | : | Fr. Vinoth, Poonamallee |
| Theme | : | Introducing the missionary month & "Missio Ad Gentes" |
| Venue | : | Madha Hill, Chetpet |

| | | |
|---|---|---|
| Date | : | 31-07-2019, Wednesday |
| Speaker | : | Sr. Metty, Holy Cross, Sathuachary |
| Theme | : | "Maximum illud" (an apostolic letter issued by Pope Benedict XV on 30 Nov.1919) |
| Venue | : | Jubilee Hall, Bishop's House |

| | | |
|---|---|---|
| Date | : | 24-08-2019, Wednesday |
| Speaker | : | Fr. Mangala David, Veppoor |
| Theme | : | Baptized and Sent: The Church of Christ on mission in the world (Book) |
| Venue | : | Jubilee Hall, Bishop's House |

## II. Diocesan Pastoral Council (DPC)

| | | |
|---|---|---|
| Date | : | 29-06-2019, Saturday |
| Speaker | : | Fr. Ezhil OFM Cap, Arcot |
| Venue | : | Jubilee Hall, Bishop's House |

### III. Teachers

Date : ____________________

Speaker : Dr. Soosai Mani OSM.,

Venue : Ulagamadha Church, T.V. Malai

### IV. Vellore CRI

Date : 13-07-2019, Saturday

Speaker : Dr. A.C. Savarimuthu, Pavithiram

Venue : Sangamam Hall, Vellore

### V. Pious Associations

Date : 27-07-2019, Saturday

Speaker : Sr. Jeyamani, FMA.

Venue : Madha Hill, Chetpet

### VI. Youth

Date : 18-08-2019, Sunday

Speaker : Mr. Arunkumar, Gandhinagar

Venue : Don Bosco School, Polur

### VII. Catechists

Date : 21-08-2019, Wednesday

Speaker : Fr. George Chinnappan SDB., Tindivanam

Venue : Jubilee Hall, Bishop's House

Our beloved bishop as we know has started Golden Jubilee of his Religious Life on 24-05-2019 and his 70 Birthday is on Thursday 6 June, 2019. He is our good shepherd,

charismatic and visionary leader and loving brother. We are very proud of his bishopric and are blessed by his leadership. We the priests, religious, teachers, catechists, youth and the laity of Vellore diocese wish all God's choicest blessings upon him. Let us keep him in our prayers and pray for his good health of mind and body.

**Msgr. I. John Robert**

Vicar General

**<u>Bishop's Programme</u>**

| | | |
|---|---|---|
| 05 | Wed | Meeting at Chetpet |
| 11 | Tue | St. Mary's, Chennai |
| 12 | Wed | St. Antony's Feast, Kaspa |
| 13 | Thu | St. Antony's Shrine Feast, Virduvilanginan |
| 15 | Sat | Passionate Provincial Visit, Vellore |
| 17 | Mon | Recollection at Chetpet |
| 18 | Tue | Adoration Convent, Sathuvacherry |
| 29 | Sat | Diocesan Pastoral Council, Vellore |

**+ Most Rev. Dr P. Soundararaju, SDB**

Bishop of Vellore

## Priests' Transfer List - 2019

**Parishes**

| | | |
|---|---|---|
| 1. | Pavithram | Fr.A.C.Savarimuthu |
| 2. | Vettavalam (VF) | Fr.A.Arockiasamy |
| 3. | Eleyankanni | Fr.Charles Jesudass |
| 4. | Christianpet | Fr.Edwin Savariyappa |

| | | |
|---|---|---|
| 5. | Kanniyambadi | Fr.A.Anbazhagan |
| 6. | Kariyandal | Fr.A.Paul Bosco |
| 7. | Sipcot | Fr.C.Dayalaraj |
| 8. | Ranipet | Fr.P.Leo Maria Joseph |
| 9. | Somasipadi | Fr.A.C.John Peter |
| 10. | Uriyurkuppam | Fr.B.Antony Suresh |
| 11. | Kasthambadi | Fr.L.Joseph |
| 12. | Melpudhupakkam | Fr.A.Anandraj |
| 13. | Nelliyankulam | Fr.P.Gnanasekar |
| 14. | Mekkalur | Fr.R.Antonyraj |

**Offices**

| | | |
|---|---|---|
| 1. | Manager | Fr.S.A.S.Clement Rosario |
| 2. | CPC Director | Fr.L.Ramesh |
| 3. | VSSS & TVMSSS | Fr.S.James |
| 4. | St. Antony Matric School | Fr.Sagaya Josephson |
| 5. | Director – CODEP | Fr.S.Richard Perarira |
| 6. | Vice – Rector, Inter Diocesan Seminary, Veppoor | Fr.Sigamani |
| 7. | Assistant - Loyola Ramana Maharishi Matric. School, Ayyampalayam, | Fr.Jeevagan |

**Boarding Incharge**

| | | |
|---|---|---|
| 1. | Chetpet | Fr.F.Felix Kamal |
| 2. | Vettavalam | Fr. Nirmalraj |

**Assistant Parish Priests**

| | | |
|---|---|---|
| 1. | Chetpet | Fr.Kulandai Yesu |
| 2. | Arni | Fr.Velankanni |
| 3. | Viruthuvilankinan | Fr.John Paul |

**+ Most Rev. Dr P. Soundararaju, SDB**
Bishop of Vellore

## Vicar General's Office

**Monthly Recollection**

Dear Rev. Fathers, Brothers and Sisters

In view of the beginning of the EXTRAORDINARY MISSIONARY MONTH, OCTOBER 2019 we will anticipate our monthly recollection for June on **Monday, 17 June 2019 at Madha Hill, Chetpet at 10:00 am**. Kindly note the change of date and venue and come for the recollection. Thanks for your kind understanding and cooperation.

**Bishop's Birthday and Ordination Day**

This year our bishop celebrates his **70 birthday on Thursday, 6 June 2019.** It is a special birthday. So we the presbyterium of Vellore diocese together with the Religious, Teachers, Catechists, Youth , Children and Faithful wish him a very memorable HAPPY BIRHT DAY and God's choicest blessings in abundance. Also our bishop celebrates his Ordination day on Tuesday, 25 June 2019.

We wish him HAPPY ORDINATION DAY. Let the Lord shower all the choicest blessings upon him and keep him in good health of mind and body. Let us thank the Lord for the gift of our beloved bishop as a good shepherd and visionary charismatic leader.

**Very Rev. Msgr. I. John Robert**
Vicar General

## PROCURATOR'S OFFICE

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Gandhi Nagar | 33000 |
| 2 | Kasthambadi | 4600 |
| 3 | Gudiyatham | 20150 |
| 4 | Arcot | 10397 |
| 5 | Sirungattur | 3936 |
| 6 | Nelliyankulam | 2650 |
| 7 | Sathuvacharry | 22870 |
| 8 | Perumanam | 5000 |
| 9 | Thalayampallam | 2000 |
| 10 | Haffieldspet | 5000 |
| 11 | Mazhuvankarunai | 8250 |
| 12 | A.Kattupadi | 15780 |
| 13 | Madurampattu | 6700 |
| 14 | Alapakkam | 4610 |
| 15 | Thachambadi | 14666 |
| 16 | Veeralur | 6000 |
| 17 | Santhavasal | 6460 |
| 18 | Mosavadi | 3000 |

| | | |
|---|---|---|
| 19 | Pavitram | 14066 |
| 20 | Gengapattu | 16435 |
| 21 | Perunduraipattu | 5000 |
| 22 | Zamingudallore | 7000 |
| 23 | Parasur | 1000 |
| 24 | Kariyandal | 10000 |
| 25 | Mekkalure | 4500 |
| 26 | Vettavalam | 10000 |
| 27 | Jolarpet | 7500 |
| 28 | Thirumalai | 1500 |
| 29 | Vaniyambadi | 2500 |
| 30 | Ranipet | 27111 |
| 31 | Katpadi | 21000 |
| 32 | Koviloor | 22600 |
| 33 | Theresapuram | 5340 |
| 34 | Shenpakkam | 7060 |
| 35 | Chetpet | 45000 |
| 36 | Viruduvilanginan | 5500 |
| 37 | Kolappalur | 8000 |
| 38 | Polur | 5110 |
| 40 | Maruthuvambadi | 8000 |
| 41 | Gengapuram | 2200 |
| | **Total** | **411491** |

Thanks for all those who have already remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

09.05.2019 அன்று மேல்புதுப்பாக்கம் பங்கில் வேலூர் சமூக சேவை சங்கத்தின் அங்கீகாரத்தில் செயல்படும் அமைப்புகளின் ஆய்வு கூட்டம் திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்கள் தலைமையிலும், ஒருங்கிணைப்பாளர்கள் திரு. V.S.ஜார்ஜ் மற்றும் திருமதி. P.S.செ–ன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. சங்கப்பணிகள், எதிர்காலத் திட்டங்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆகியவை கலந்துரையாடல் மூலம் விவாதிக்கப்பட்டது. சிறுபான்மையினர் நலத்திட்டத்தின் மூலம் கடன் உதவிகள் பெறவும், கோல்பிங், VSSS வழியாக கிடைக்கும் திட்டங்களின் மூலமாகவும், இயற்கை விவசாயத்தில் குழுக்கள் ஈடுபடவும், இதற்கான உதவிகளை பங்குத்தந்தை மூலமாகவும், இயக்குநர் வழியாக ஆயரிடம் உதவிகள் கேட்க திட்டமிடப்பட்டது. இதில் 65 உறுப்பினர்களும், குழுவில் இல்லாத 5 நபர்களும் கலந்து:க் கொண்டனர்.

செய்தி தொகுப்பு
திரு. **A.பேட்ரிக்**
திட்ட மேலாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW**
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## கோல்பிங் இந்தியா / வேலூர் மறைமாவட்டம்

13.05.2019 திங்கட்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருவண்ணாமலை சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்தில் கோல்பிங் இயக்கம் சார்பாக "தீங்கு விளைவிக்காத இயற்கை விவசாயத்தின் பயன்களை சமுதாயத்திற்கு உணரச் செய்து செயல்படுத்தும் முறை" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. V.S.ஜார்ஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சிறுத்தொழில் செய்வோருக்கான

வழிமுறைகள் பற்றி வேலூர் சமூக சேவை சங்கத்தின் திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் விளக்கினார்.

VSSS & TVMSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ் அவர்கள் கருத்தரங்கின் நோக்கம், நடைமுறை செயல்பாடுகள் பற்றி உரை நிகழ்த்தினார். வந்தவாசி இயற்கை விவசாயம் நிபுணர் திருமிகு. R.பழனி அவர்கள் நம்மிடம் இருக்கும் நிலம், கால்நடை உள்வளங்களை வைத்து இயற்கை விவசாயம் செய்யும் வழிமுறைகள், மண்வளம் காக்க பசும் தாழ் உரம், தழை உரம், மண்புழு உரம் தயாரிக்கும் முறை, பல்வகை பயிர் வளர்ப்பு பற்றியும் விளக்க உரை நிகழ்த்தினார்கள். போளூர், வேட்டவலம் வட்டார கோல்பிங் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 40 நபர்கள் ஆர்வத்தோடு கலந்துக்கொண்டு பயன்பெற்றனர். கூட்ட நிகழ்வுகளில் விழிப்புணர்வு பாடல்களை திரு. இராசு லூயிஸ் பாடினார். கோல்பிங் உறுப்பினர் திருமதி. சந்தனமேரி அவர்கள் நன்றி கூறினார். இயக்குநரின் ஆசீருடன் இக்கருத்தரங்கு நிறைவுபெற்றது.

செய்தி தொகுப்பு

| | |
|---|---|
| திரு. **V.S. ஜார்ஜ்** | பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW** |
| ஒருங்கிணைப்பாளர் | இயக்குநர், வேலூர் |

## HUNGER AND DISEASE FUND COLLECTION – 2019

| S. NO. | DATE | PLACE | AMOUNT RS. |
|---|---|---|---|
| 1 | 29.04.2019 | Pulivanandal | 1,400 |
| 2 | 29.04.2019 | Bagayam | 20,390 |
| 3 | 29.04.2019 | Thirumalpadi | 1,800 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 29.04.2019 | Devikapuram | 5,270 |
| 5 | 02.05.2019 | Gandhi Nagar | 22,000 |
| 6 | 02.05.2019 | Kasthampadi | 2,400 |
| 7 | 02.05.2019 | Gudiyatham | 4,140 |
| 8 | 04.05.2019 | Arcot | 21,160 |
| 9 | 06.05.2019 | Sirunkattur | 2,260 |
| 10 | 06.05.2019 | Nelliankulam | 460 |
| 11 | 06.05.2019 | Sathuvachary | 10,000 |
| 12 | 09.05.2019 | Thalayampallam | 2,000 |
| 13 | 09.05.2019 | Perumanam | 4,000 |
| 14 | 09.05.2019 | Mazhuvankarunai | 6,300 |
| 15 | 09.05.2019 | Haffieldspet | 5,000 |
| 16 | 09.05.2019 | A.Kattupadi | 7,250 |
| 17 | 09.05.2019 | Madurampattu | 6,000 |
| 18 | 09.05.2019 | Alapakkam | 1,400 |
| 19 | 11.05.2019 | Veeralur | 10,000 |
| 20 | 11.05.2019 | Santhavasal | 1,850 |
| 21 | 13.05.2019 | Perunthuraipet | 2,100 |
| 22 | 13.05.2019 | Gengapattu | 8,788 |
| 23 | 13.05.2019 | Zamin Gudalore | 3,000 |
| 24 | 13.05.2019 | Katpadi | 15,000 |
| 25 | 13.05.2019 | Mosavadi | 1,500 |
| 26 | 13.05.2019 | Koviloor | 36,130 |
| 27 | 14.05.2019 | Ranipet | 30,000 |
| 28 | 14.05.2019 | Kariyandal | 17,000 |
| 29 | 14.05.2019 | Mekkalore | 2,000 |
| 30 | 14.05.2019 | Vettavalam | 10,000 |
| 31 | 14.05.2019 | Jolarpet | 2,000 |
| 32 | 14.05.2019 | Pavithiram | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 33 | 14.05.2019 | Thirumalai | 1,500 |
| 34 | 14.05.2019 | Parasur | 1,000 |
| 35 | 14.05.2019 | Vaniyambadi | 1,500 |
| 36 | 14.05.2019 | Veppoor | 2,900 |
| 37 | 14.05.2019 | Shenpakkam | 4,020 |
| 38 | 14.05.2019 | Theresapuram | 18,609 |
| 39 | 15.05.2019 | Chetpet | 10,000 |
| | | **TOTAL** | **3,07,127** |

செய்தி தொகுப்பு
திரு. **A.பேட்ரிக்**
திட்ட மேலாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW**
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## மறைவட்டச் செய்திகள்

## பொதுநிலையினர் ஞாயிறு கொண்டாட்டம்

பெறுநர்

மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு செயலர்கள்

பொருள் : பொதுநிலையினர் ஞாயிறு கொண்டாட்டம் – மறைமாவட்ட செய்தி மலர் ஜுன் – 2019.

அன்புடையீர்,

பொதுநிலையினர் பாதுகாவலர் புனித தாமஸ் மூர் விழாவைத் தொடர்ந்து வரும் ஞாயிறு 23.06.2019 “கிறிஸ்தவின் தூய்மைமிகு திருஉடலும் திரு இரத்தமும்’’ பெருவிழாவாகும். ஆகவே “பொதுநிலையினர் ஞாயிறு” 30.06.2019 என்று அனைத்துப்

பங்கிலும் கொண்டாடுவதற்கான திருவழிபாட்டுக் குறிப்புகள், துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் அனுப்பப்படும்.

கீழ்காணும் செய்தியை முன்கூட்டியே தங்கள் மறைமாவட்ட செய்தி மலர், மற்றும் இதழ்களில் இடம்பெறச் செய்யவும்.

செய்திக்காக :

இந்த ஆண்டு ''பொதுநிலையினரின் தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்போம்" என்ற மையக் கருத்தில் 30.06.2019 அன்று கொண்டாடப்படுகிறது. மாநில பொதுநிலையினர் பணிக்குழு அனுப்பியுள்ள திருவழிபாட்டுக் குறிப்புகள், துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் அனைத்தும் பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுநிலையினர் ஞாயிறை தங்கள் பங்குகளில் சிறப்பாகக் கொண்டாட பங்கு குழு, அமைப்புகள், இறைமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அருள்பணி. சு.லூர்துசாமி**
செயலர்
பொதுநிலையினர் பணிக்குழு

## அறிவியல் மாணவர்களுக்கு ஃபெல்லோஷிப்

பிளஸ் ஒன், பிளஸ் டூ, பிஎஸ்சி முதலாண்டு மாணவர்கள் உயர்கல்வி பயில மத்திய அரசு வழங்கும் கல்வி நிதியுதவி

கேவிபிஒய் எனப்படும் கிஷோர் வைக்யானிக் புரோட்ஷான் யோஜனா ஃபெல்லோஷிப் திட்டம் அடிப்படை அறிவிய-ல் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் செயல்படுத்தப்படுகிறது. மாணவர்களின் திறமையை அடையாளம் கண்டு, அவர்கள் அறிவியல் ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான ஆதரவையும் உற்சாகத்தையும் வழங்கும் திட்டம்.

ஃபெல்லோஷிப் ஏன்?

பள்ளியில் படிக்கும்போதே மாணவர்கள் தங்கள் அறிவியல் திறனை உணர்ந்து அதை மேம்படுத்திக் கொள்ளும்போது, நாட்டின் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் வளாச்சிக்கம் பயன்படுகிறது. இந்த ஃபெல்லோஷிப் திட்டத்தால் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் பிஎச்டி ஆய்வில் ஈடுபடுவதற்கு நிதியுதவி செய்யப்படும். மேலும், நாட்டின் புகழ்பெற்ற உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் நடத்தப்படும் கோடை முகாம்களில் கலந்து கொள்ளலாம். கேவிபிஒய் ஃபெல்லோஷிப் திட்டத்தை பெங்களூருவில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ், ஒரு மேலாண்மைக் குழுவை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

கல்வித் தகுதி

மூன்று பிரிவுகளாக ஃபெல்லோஷிப் வழங்கப்படுகிறது. முதல் பிரிவு ஸ்ட்ரீம் எஸ்ஏ என அழைக்கப்படுகிறது. அதைப்பெற விரும்புவோர் 2019-20 கல்வியாண்டில் அறிவியல் பாடப்பிரிவில் பிளஸ் ஒன் படிப்பவராக இருக்கவேண்டும். பத்தாம் வகுப்பில் 80 சதவீத மதிப்பெண்கள் அவசியம். தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினருக்கு 70 சதவீதம்.

இரண்டாவது பிரிவு ஸ்ட்ரீம் எஸ்எக்ஸ் 2019-20 கல்வியாண்டில் பிளஸ் டூ படிப்பவராகவும், 2020-21 கல்வியாண்டில் பிஎஸ்சி, பிஎஸ், பிஸ்டாட், ஒருங்கிணைந்த எம்எஸ்சி உள்ளிட்ட படிப்புகளில் சேர்பவராகவும் இருக்க வேண்டும். பிளஸ் டூ வகுப்பில் 60 சதவீத மதிப்பெண்கள் அவகியம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினருக்கு 50 சதவீதம்.

மூன்றாவது பிரிவு ஸ்ட்ழீம் எஸ்பி 2019-20 கல்வியாண்டில் பிஎஸ்சி, பிஎஸ், பிஸடாட் உள்ளிடம் இளநிலைப் படிப்புகளில் சேர்பவராக இருக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் டூ வகுப்பில் 60

சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினருக்கு 50 சதவீதம்.

தேர்வு

ஆன்லைன் வழியாக தேர்வு நடத்தப்படும். ஆங்கிலம் மற்றும் இந்தியில் கேள்வித்தாள் இருக்கும். மல்டிபுள் சாய்ஸ் முறையில் கேள்விகள் கேட்கப்படும். ஸ்ட்ரீம் எஸ்ஏ பிரிவில் நடத்தப்படும் தேர்வில் எல்லா கேள்விகளுக்கும் விடையளித்தாக வேண்டும். தேர்வுக்காலம் 3மணி ரேநம். மதிப்பெண்கள் 100, கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடப்பிரிவுகளில் இருந்து கேள்விகள் இடம்பெறும்.

விண்ணப்பிப்பது எப்படி ?

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஜுலை மூன்றாவது வாரத்தில் இணையத்தளத்தில் விண்ணப்பம் கிடைக்கும். இந்திய குடிமகன்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் போது ஸ்கேன் செய்யப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம், கையெழுத்து மற்றும் மருத்துவ, சாதிச்சான்றிதழ்களை இணைக்கவேண்டும்.

விண்ணப்பக்கட்டணம் ரூ.1000, தாழ்த்தப்பட்ட, பழங்குடிப் பிரிவினருக்கு ரூ.500, ஆகஸ்ட் மாத கடைசி வாரத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

தேர்வு நடைபெறும் நாள் 3.11.2019

விவரங்களுக்கு : www.kvpy.iisc.ernet.in

அருள்பணி. **S.லூர்துசாமி**
9487321179

## Birth Days

| | | |
|---|---|---|
| 1 | Fr. M.Backia Raj | 01-06-1982 |
| 2 | Fr. Mangaladavid | 03-06-1971 |
| 3. | Fr. A.Chinnasmay | 05-06-1989 |
| 4 | Fr. R .Antony Raj | 05-06-1983 |
| 5 | Fr. A. Chinnasamy | 05-06-1989 |
| 6 | Fr. I.Anthoni Selvaraj | 07-06-1978 |
| 7 | Fr. B. Arokia Nirmal Raj | 08-06-1984 |
| 8 | Fr. L.Joseph | 09-06-1983 |
| 9 | Fr.S.C.Jeyakumar | 14-06-1983 |
| 10 | Fr. S.Arul Doss | 15-06-1977 |
| 11 | Fr.M .Johnson | 17-06-1984 |
| 12 | Fr. C.Arputharaj | 20-06-1981 |
| 13 | Fr. M.Peter Raj | 23-06-1976 |
| 14 | Fr T.Prem Kumar | 23-06-1982 |
| 15 | Fr. A.Vincent | 26-06-1972 |
| 16 | Fr. A.Arockiasamy | 26-06-1975 |
| 17 | Fr. I.Arokiasamy | 27-06-1958 |
| 18 | Fr. J.Vincent Antoni Raj | 28-06-1980 |
| 19 | Fr. S. John Peter | 29-06-1973 |
| 20 | Fr. S.Daniel | 30-06-1958 |
| 21 | Fr. A. J.Jagadish | 30-06-1975 |
| 22 | Fr. A.Paul Bosco | 30-06-1978 |



## Ordination Day

| | | |
|---|---|---|
| 1. | Rev. Fr. S. Jesu Jeyabalan | 15.06.2005 |

## Calender

| | | |
|---|---|---|
| 01 | Sat | St. Justin, Mem |
| 02 | Sun | Ascension of the Lord, Sol |
| 09 | Sun | Pentecost Sunday |
| 11 | Tue | St. Barnabas AP., Mem |
| 13 | Thu | St. Antony of Padua., Doctor., Mem |
| 16 | Sun | The Most Holy Trinity, Sol |
| 21 | Fri | St. Aloysius Gonzaga, Rel, Mem |
| 23 | Sun | The Most Precious Body and Blood of Christ, Sol |
| 28 | Fri | Sacred Heart of Jesus, Sol |
| 29 | Sat | SS. Peter and Paul APP., Sol |

## Necrology

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Jacob Karimbal SDB | 06.06.1984 |
| 2 | Rev. Fr. Anthony Hickman SDB | 09.06.1983 |
| 3 | Rev. Fr. P. Vanathaiyan | 15.06.2009 |
| 4 | Rev. Fr. Thomas Kaipally | 15.06.2000 |
| 5 | Rev. Fr. Julius Derez SDB | 19.06.1972 |
| 6 | Most Rev.PaulMariaSelvam,SDB | 25.06.1954 |

## Intention

Let us pray that Priests, through the modesty and humility of their lives, commit themselves actively to solidarity with those who are most poor.

## RIP

In your charity, kindly pray for the repose of the soul of **Mr. Lawrence** beloved Uncle of Rev. Frs. M. John Nicholas & D.Maria Selvam who passed away on 07 May 2019. May his soul rest in peace!

In your charity, kindly pray for the repose of the soul of **Mrs. Pushpa Theresa** beloved Mother of Rev. Fr. S. Joseph Raj who passed away on 19 May 2019. May her soul rest in peace!